
# திராவிடத்தால் வாழ்கிறோம்

845

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

12

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் உருவானபோது, முன்வைத்த முதன்மை முழக்கம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம். 1907-ஆம் ஆண்டிலேயே, 'அஞ்சுமன் முஃபித் இஸ்லாம்' எனப்படும் 'தென்னிந்திய முஸ்லிம் கல்வி இயக்கமும்' இதே கோரிக்கையை முன்வைத்தது. எந்தவொரு குறிப்பிட்ட ஜாதியினரும் நிர்வாகத்தில் அதிகப்படியான இடங்களை அனுபவிக்கக்கூடாது என்ற கோரிக்கையை வைஸ்ராயிடம் இந்த அமைப்பு தந்தது. ஆனால், கல்வி-வேலை இரண்டிலும் சரிபாதிக்கும் அதிகமான இடங்களை, ஆரிய உயர்ஜாதியினரே அன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

1912-ஆம் ஆண்டில் அரசின் பொதுத்துறை வேலை பற்றிய ஆணையம் உருவாக்கப்பட்டது. அதுதொடர்பான விவாதங்களில் இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க கிறிஸ்தவ சங்கங்கள் பங்கேற்று, குறிப்பிட்ட ஓர் உயர் ஜாதியின் ஆதிக்கம் கோலோச்சுவதைக் கட்டுப்படுத்தி, அனைத்து சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தினர்.

அந்த விவாதங்களில் அலெக்ஸாண்டர் கேட்ரூ என்ற ஆங்கிலேய அதிகாரி, பார்ப்பன ரல்லாதோரின் இடஒதுக்கீடு உரிமைகளை வரவேற்றுப் பேசினார். அதுதான் **'கம்யூனல் ரிசர்வேஷன்'** என்ற விகிதாச்சார வேலைத்திட்டத்திற்குப் பின்னாட்களில் வழிவகுத்தது. 1920-இல் 'நீதிக்கட்சி' வெற்றிபெற்ற பின்னர் கல்வி- வேலைவாய்ப்பில் பார்ப்பன ரல்லாதோருக்கான வகுப்புரிமை முயற்சிகள் வலுப்பெற்றன. சட்டமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1927-ஆம் ஆண்டு பி.சுப்பராயன் தலைமையிலான அமைச்சரவை யில், முத்தையா முதலியார் 'கம்யூனல் ஜி.ஓ'-வை நடைமுறைப்படுத்தினார்.

அதில் இஸ்லாமியர்களுக்கு, சென்னை மாகாணத்தில் 16 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. 1947-ஆம் ஆண்டு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஆட்சிக் காலத்தில் இந்த சதவிகிதம் 7-ஆகக் குறைக்கப்பட்டது. ஆனால், 1954-ஆம் ஆண்டு காமராசர் தலைமையிலான காங்கிரஸ் அரசு, 'மத ரீதியான இடஒதுக்கீடு கூடாது' என இஸ்லாமியர்களுக்கான 7 சதவிகித இடஒதுக்கீட்டை ரத்து செய்தது. அப்போது அமைச்சரவையிலும் இஸ்லாமியர் ஒருவர்கூட இல்லை. இவையெல்லாம் காங்கிரஸ் மீது இஸ்லாமியர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தின எனலாம். அதேவேளையில், 'ஆட்சியிலும், கல்வி வேலைவாய்ப்பிலும் இஸ்லாமியர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தருவோம்' என்று முழங்கியது திராவிட முன்னேற்றக் கழகம்.

### முதலுதவி தந்த கலைஞர்!

1967-ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன்முறையாக, ஒரு மாநிலக் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியமைத்தது. ஆனாலும், இஸ்லாமியர்களுக்கான தனி இடஒதுக்கீடு வழங்குவதைத் தன்னிச்சையாக முடிவெடுக்கக்கூடிய அதிகாரம், அன்றைக்கு மாநில அரசிடம் இல்லை. எனினும், பிற்படுத்தப்பட்டோருக்கான 31 சதவிகித இடஒதுக்கீட்டில் இஸ்லாமியர்களைப் பங்கெடுக்கச் செய்து, இஸ்லாமிய சமூகம் சந்தித்த 18 ஆண்டுகால இழப்புக்கு, முதலுதவி செய்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அதன்பிறகு, இஸ்லாமிய சமூகத்தினருக்கான இடஒதுக்கீட்டுக் குரல்கள் தொடர்ந்துகொண்டே இருந்தன. ஆனால், ஒன்றியத்தை யார் ஆண்டாலும் இஸ்லாமியர்களின் இட ஒதுக்கீட்டுக்கு, முழு தீர்வு காண எவரும் முனைப்பு காட்ட முயற்சிக்கவில்லை.

ஆனால், 2001-இல் அ.தி.மு.க. அரசு அமைந்துவிட, 5 ஆண்டுகள் இஸ்லாமியர் இடஒதுக்கீட்டு உரிமை குறித்து பேச்சுக்களுக்கோ அல்லது கோரிக்கைக்கோ கூட இடமில்லாமல் போனது. இடைப்பட்ட காலத்தில்தான் ஒன்றியத்தில், மன்மோகன் சிங் ஆட்சி அமைந்ததும் ரங்கநாத் மிஸ்ரா ஆணையமும், சச்சார் குழுவும் அமைக்கப்பட்டன. அதன் பின்னணியிலும் கலைஞரின் பங்களிப்பும் அழுத்தமும் முக்கியமானவை.



# கலைஞர் தந்த தீர்வும் நூற்றாண்டு கனவும்...

இந்தச் சூழலில்தான், 1999-ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் தேதியன்று நடைபெற்ற உலகத் தமிழ் இஸ்லாமிய இலக்கிய ஆறாவது மாநாட்டின் நிறைவு விழாவில், முத்தமிழறிஞர் கலைஞருடன் தி.மு.கழகத்தின் அன்றைய கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான பா.ம.க.-வின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் பங்கேற்றார். அவர் பேசும்போது, "கிறிஸ்தவராக இருந்தாலும் சரி, இஸ்லாமியராக இருந்தாலும் சரி, அவர்களின் உடன்பிறவா முன்னேற்றக் கழகத்தார் இடஒதுக்கீட்டில் என்ன செய்யப் போகிறார்கள்" என்ற வினாவை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த கலைஞர், "மருத்துவர் என்றால், நோய்க்கு மருந்து கொடுக்க வேண்டும், ஆனால், ஒரு நோயையே உருவாக்கிவிட்டாரோ என்ற அச்சம், எனக்கு ஏற்பட்டிருக்கிறது" என நகைச்சுவையாகக் கூறிவிட்டு, "இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு இல்லாததுதான் நோய், அந்த நோயை விரைவில் நிச்சயம் குணப்படுத்துவேன். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நானும் ஏற்கெனவே டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறேன், அதனால், அந்த நோயை நிச்சயம் குணப்படுத்துவேன்" என அவருக்கே உரிய தனித்த பாணியில் சுவாரஸ்யமான பதிலைத் தந்து உறுதியளித்தார்.

"அந்தந்த மாநில அரசுகள் இடஒதுக்கீட்டிலே யார் யாருக்கு எவ்வளவு இடம் கொடுக்கலாம் என்பதை முடிவு செய்யும் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வாருங்கள் என பல ஆண்டுகளாக தி.மு.கழகம் கேட்டுக்கொண்டிருக்கிறது. அந்த சட்டம் வரும் நேரத்தில் வரட்டும், அதற்காக காத்திராமல் வெகு விரைவில் குறிப்பிட்ட சதவிகிதத்தை இஸ்லாமியர்களுக்கு வழங்குவோம்" என்றும் ஆணித்தரமாகக் கூறினார் கலைஞர். ஏற்கெனவே கடற்கரையில் நடந்த ஒரு கூட்டத்திலும் இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப் பரிசீலிப்போம் எனக் கூறியிருந்தார் கலைஞர்.

> **சமூகநீதிப் பயணத்தை, கலைஞருக்குப்பின், இன்றைய நம் கழகத் தலைவருடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது முஸ்லிம் சமூகம்.**

முஸ்லிம்களுக்கு இட இதுக்கீடு என்கிற கோரிக்கையை, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகமும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த நிலையில், 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்ற முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் முக்கிய கோரிக்கையாக இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு கோரிக்கை இருந்தது. அந்தக் கோரிக்கையை கலைஞரும் ஏற்றுக்கொண்டி ருந்தார். குறிப்பாக, மிஸ்ரா ஆணைய பரிந்துரைப்படி, முஸ்லிம்களுக்கு கல்வி வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு அளிக்கச் செய்துள்ள பரிந்துரையை நடைமுறைப்படுத்து வோம் என்று 2006 தேர்தல் அறிக்கையில் தி.மு.க. உறுதியளித்திருந்தது. ஆனால், கூட்டணி தொடர்பாக கலைஞர் வெளியிட்ட செய்திக் குறிப்பில், இஸ்லாமியர்களின் இடஒதுக்கீடு கோரிக்கை இடம்பெறவில்லை என சர்ச்சை கிளம்பியது. ஆனால், இஸ்லாமிய சமூகப் பிரதிநிதிகளை நேரில் அழைத்து, கோரிக்கை விடுபடவில்லை என்று விளக்கினார் கலைஞர்.

### தீர்வு எட்டிய கலைஞர்

மீண்டும் 2006-இல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தவுடன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி எம்.எஸ்.ஜனார்த்தனம் தலைமையில், மிஸ்ரா ஆணைய பரிந்துரையின் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 99-ஆம் ஆண்டு பிறந்த நாள் பரிசாகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 30 சதவிகித இட ஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகிதமும், கிறிஸ்த வர்களுக்கு 3.5 சதவிகிதமும் தனி உள் இடஒதுக்கீடு வழங்கி, 12.09.2007 அன்று கலைஞர் ஆணையிட்டார். ஆனால், கிறிஸ்தவ சமூகம் தங்களுக்கு தனி இடஒதுக்கீடு தேவையில்லை எனக் கூறிவிட்டதால், அந்தத் தனி இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டது. பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில் இஸ்லாமிய சமூகத்திற்கான 3.5% தனி இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது. இஸ்லாமிய சமூகத்தினரின் அரை நூற்றாண்டு தவிப்புக்குக் காணப்பட்ட தீர்வாக இது அமைந்தது. கலைஞர் தந்த தீர்வில்தான் இன்றும் முஸ்லிம் மக்களின் இளந்தலைமுறை பயன்பெற்றுக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில், நீலகிரிக்குப் பயணம் சென்ற நமது முதலமைச்சர், அங்கு அவர் தொடங்கி வைத்த அரசு மருத்துவக் கல்லூரியைப் பார்வையிடச் சென்றார். அவருடன் குழு புகைப்படம் எடுத்த மாணவர்களில் இஸ்லாமிய மாணவர்களும் இடம் பெற்றனர். அது, முஸ்லிம் இடஒதுக்கீட்டால் கிடைத்த பலன் என்றால் மிகையில்லை. நூற்றாண்டுக் கனவின் காட்சி வடிவமாக உயிர்பெற்றது அந்தப் புகைப்படம். சமூகநீதிப் பயணத்தை, கலைஞருக்குப் பின், இன்றைய நம் கழகத் தலைவருடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது முஸ்லிம் சமூகம்.

...நீளும்

## கல்வி ஒன்றே நமது ஆயுதம்!



திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை உச்சியில் உள்ள அரசவல்லி மலை கிராம, பழங்குடியினர் அரசுப் பள்ளியில் ஆசிரியராக இருப்பவர் மகாலட்சுமி. அந்தப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவி துர்கா குறித்து, ஆசிரியர் மகாலட்சுமி பகிர்ந்துள்ள சமூக வலைதளப் பதிவு கவனம் பெற்றுள்ளது.

மாணவி துர்காவின் குடும்பத்தினர் ஆண்டுதோறும் 4 மாதங்கள் வேலைக்காக கர்நாடகாவிற்குக் குடிபெயர்ந்துவிடுவார்கள். ஏப்ரல் 15-ஆம் தேதிக்குப் பிறகுதான் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் மலை கிராமத்திற்குத் திரும்புவார்கள். இதனால் மாணவியின் கற்றல் திறன் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. எழுதிய, பழகிய எழுத்துகள் அந்நியமாகி, ஊரில் இருக்கும்போதும் பள்ளிக்கு வருவதைக் குறைத்துக்கொண்டுள்ளார் மாணவி.

ஆனால், ஆசிரியர் மகாலட்சுமி, மாணவியை வீடு தேடிச்சென்று அழைத்து வந்து பள்ளிக்கூடத்தில் அமரவைத்து கற்பிப்பதை வாடிக்கையாக வைத்துள்ளார். மாணவி ஒன்பதாம் வகுப்பை அடைந்தபோது, 'தினசரி பள்ளிக்கு வர வேண்டும், இனி விடுப்பே எடுக்கக்கூடாது' என குடும்பத்தினரிடம் சம்மதம் பெற்று, மாணவிக்கும் கல்வி மீதான ஆர்வத்தைத் தூண்டியுள்ளார். ஆனால், பத்தாம் வகுப்பிற்கு வந்தவுடன், பொதுத்தேர்வு மீதான பயத்தால் மீண்டும் விடுப்பு எடுக்கத் தொடங்கியுள்ளார் துர்கா. பள்ளியில் இருந்து விலகி, ஐ.டி.ஐ.யில் சேர்ந்து கொள்கிறேன் என்றெல்லாம் மாணவி அழுதிருக்கிறார். ஆனால், மாணவியிடமும் பெற்றோரிடமும் பேசி படிப்பைத் தொடரச் செய்தார் ஆசிரியர் மகாலட்சுமி.

பெரும் போராட்டத்திற்குப் பிறகு மாணவி துர்கா தற்போது பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார். மீண்டும் அதே பள்ளியில் 11-ஆம் வகுப்பில் சேரப்போவதாகவும் கூறியிருக்கிறார் மாணவி துர்கா. இந்த நெகிழ்ச்சியான பதிவில், பலர் மாணவிக்கும் ஆசிரியருக்கும் வாழ்த்துகளைப் பகிர்ந்திருக்கிறார்கள். கல்வி ஒன்றே நமது ஆயுதம். எத்தனை தடைகள் வந்தாலும், அதை விட்டுவிடக்கூடாது என்பதற்கு மாணவி துர்கா ஒரு சிறந்த முன்னுதாரணம். நாமும் வாழ்த்துவோம்.

## ஃப்ளாஷ்பேக்



ஆர்.பி.பிரகாஷ்



### தலைவரிடமிருந்து பெற்ற பாராட்டு!

2012-ஆம் ஆண்டு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், ஏற்காட்டில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் பயிற்சியில் பங்கேற்ற எங்களைப் பாராட்டி நினைவுப்பரிசு வழங்கினார். அன்றைய கெங்கவல்லி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் என்ற முறையில், நினைவுப்பரிசு பெற்றது, என் வாழ்நாள் வரமாகக் கருதி, இன்றளவும் போற்றிப் பாதுகாத்து வருகிறேன்.

**– ஆர்.பி.பிரகாஷ், துணை அமைப்பாளர், இளைஞர் அணி, சேலம் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கொடி வாரம்!

1967-ஆம் ஆண்டு, பொதுத் தேர்தலைச் சந்திக்க, நிதி திரட்டும் பணிகளை, 1966-ஆம் ஆண்டிலேயே தொடங்கியது கழகம். 1966-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் நாள் முதல் 27-ஆம் நாள் வரை 'கழகக் கொடி வாரம்' கொண்டாடப்பட்டது. சென்னையில் நாவலரும், நெல்லையில் கலைஞரும், சேலத்தில் என்.வி.நடராசனும், திருச்சியில் கே.ஏ.மதியழகனும், கடலூரில் சத்தியவாணி முத்துவும், தஞ்சையில் ஏ.கோவிந்தசாமியும், மதுரையில் பேராசிரியரும், இராமநாதபுரத்தில் தில்லை வில்லாளனும், கோவையில் டி.கே. சீனிவாசனும், காஞ்சியில் ப.உ.சண்முக மும், சித்தூரில் ஏ.பி.ஜனார்த்தனமும், பெங்களூருவில் அரங்கண்ணலும் கொடி வாரத்தை 20-2-1966-இல் தொடங்கி வைத்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131